அசல் வழக்கு எண். 30/2022 நாள் 04.08.2023

**P.W. 1- அருள்செல்வன்**

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை- (1ம் பிரதிவாதி தரப்பில்)**

நான் சென்னையில் வசிக்கிறேனா என்றால் இல்லை திருவாரூரில் வசிக்கிறேன். திருவாரூர் வெண்டாபாளையம், 5/90 குமரேசன் அபார்ட்மெண்ட் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் 2020-21, 2021-22, 2022-23, ஆகிய வருடங்களுக்கு வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றாலல் செலுத்தி வருகிறேன். 2021-22-ம் வருடம் எந்த தேதியில் வருமான கணக்கு தாக்கல் செய்தேன் என்றால் ஜீன் மாதம் தாக்கல் செய்தேன், அதை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் கண்டிப்பாக தாக்கல் செய்ய முடியும். வழக்கறிஞர் நோட்டீஸ் எந்த தேதியில் அனுப்பினேன் என்றால் 07.02.2022-ம் தேதியில் அனுப்பினேன். அந்த நோட்டீஸை இரண்டு முகவரிக்கு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். எதற்காக இரண்டு முகவரிக்கு அனுப்பினேன் என்றால் அவர் இரண்டு முகவரியிலும் வசித்தார் என்பதால் இரண்டு முகவரிக்கும் நோட்டீஸ் அனுப்பினேன். 1-ம் பிரதிவாதிக்கு 16.02.2022-ம் தேதியில் இரண்டு முகவரிக்கும நோட்டீஸ் அனுப்பவில்லை என்றால் சரியல்ல, நான் அனுப்பியுள்ளேன். வா.சா.ஆ.1ல் கண்டுள்ள சொத்திற்கு அருகாமையில் எனது வீடு உள்ளது. 07.02.2022-ம் தேதி அனுப்பிய நோட்டீஸ்க்கு 1-ம் பிரதிவாதி பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார், அந்த பதில் அறிவிப்புக்கு நான் ஏதும் பதில் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். நான் 14-ம் தேதி 1ம் பிரதிவாதி கொடுத்த அறிவிப்பை பெற்று கொண்டு தான் மீண்டும் ரீ ஜாயிண்ட் அறிவிப்பு கொடுத்தேன். அந்த அறிவிப்பு 16.02.2022-ம் தேதி கொடுத்தேன். கிரய உடன்படிக்கை எங்கு தயார் செய்யப்பட்டது என்றால் திருக்குவளையில் தயார் செய்யப்பட்டது. யார் தயாரித்தார்கள் என்ற விவரம் மேற்படி ஆவணத்தில் இருக்கிறதா என்றால் இருக்கிறது. ரங்கசாமி 2004-ம் ஆண்டுதான் அந்த சொத்தை வாங்கினார் என்றால் சரிதான். அதன் நகலை நான் வாங்கி பார்த்தேன், அதன் மதிப்பு ரூ.35,000/-

என்றால் சரிதான். 1997-ம் ஆண்டு ரங்கசாமிக்கு விற்பனை செய்தவர் வாங்கிய பத்திரத்தையும் நான் பார்த்தேன் என்றால் சரிதான். அப்போது அதன் மதிப்பு ரூ.17,000/- என்று இருக்கிற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி தெரியாது. 1ம் பிரதிவாதி ரங்கசாமி, 2-ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட்டில் மொத்த சொத்து மதிப்பு ரூ. 2,38,000/- என்றால் சரிதான். கிரய ஒப்பந்தத்தில் முதல் கையொப்பம் போட்டவர் யார் என்றால் அம்பிகாபதி, அவர் எனக்கு உறவினரா என்றால் உறவினர் மற்றும் இரண்டு பேருக்கும் பொதுவானவர். வா.சா.ஆ.1-ல் கையொப்பம் செய்த அம்பிகாபதி தான் 17.01.2022 என்டார்ஸ்மென்டில் எழுதியதில் எழுதியது உட்பட என கண்டு கையொப்பம் செய்துள்ளார். வா.சா.ஆ.1- ஆவணத்தில் கீழே எழுதி கொடுத்தவர்கள் உள்ள கையொப்பத்தில் ரங்கசாமி கையொப்பம் இல்லை என்று அவர் சொல்கிறார் என்றால் சரியல்ல, பொய். வா.சா.ஆ.1 எழுதுவதற்கு வழக்கறிஞர் மூலம் சட்ட ஆலோசனை பெற்றேனா என்றால் இல்லை. ஆவணத்தில் உள்ள வாசகங்கள் அனைத்தையும் திருக்குவளையில் உள்ள உபயதுல்லா என்பவர் தான் தயார் செய்தார். உபயத்துல்லா என்பவர் தான் தயார் செய்தார் என்பதற்கான ஆதாரங்கள் இதில் குறிப்பிடாததற்கு தனிப்பட்ட காரணம் உண்டா என்றால்இல்லை. 17.01.2022-ம் தேதி ஏற்படுத்திய என்டார்ஸ்மென்டில் 2வது சாட்சி என கண்டுள்ளது 1ம் பிரதிவாதி ரங்கசாமியின் சகோதரர் என்றால் சரிதான். 17.01.2022-ம் தேதி ரூ.14,00,000/. நான் ரங்கசாமிக்கு கொடுத்தது அப்பட்டமான பொய் என்று சொன்னால் சரியல்ல. 17.01.2022-ம் தேதி ரங்கசாமி நாகப்பட்டின மாவடத்திலேயே இல்லை என்று சொன்னால் தவறு. சாட்சி மாரிமுத்து, அவரது மனைவி முன்னிலையில் எந்த காலத்திலும் எனக்கு கையொப்பம் போடவில்லை என்று சொன்னால் சரியல்ல, தவறு. நானும், எனது உறவினர் அம்பிகாபதியும் 1-ம் பிரதிவாதி சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வா.சா.ஆ.1 தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் ரங்கசாமியிடம் கொடுக்கல், வாங்கல் வைத்திருந்தேன் என்றாலும், அதற்காக

பாக்கியாக இருந்த ரூ.56,000/- தீர்க்கும்போது ரங்கசாமி குடிபோதையில் இருந்ததை சாதகமாக பயன்படுத்தி கையொப்பம் வாங்கி அந்த கையொப்பத்தை மாதரியாக கொண்டு வா.தா.சா.1 நானும், அம்பிகாபதியும் தயார் செய்தோம் என்றால் சரியல்ல. நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.இ. ரிசர்வ் பேங்க் அறிவிக்கிற அறிவிப்புகள் அனைத்தும் எனக்கு தெரியும். ரூ.30,000/- மேல் கை வழியாக கொடுக்க கூடாது என்பதும் எனக்கு தெரியும். மேற்படி தொகைக்கு அதிகமாக கொடுக்கிற பணம் அனைத்தும் வங்கி வழியாக நடைபெற வேண்டும் என்பதும் எனக்கு தெரியும். பத்திர பதிவு சம்பந்தமாக அனைத்து விவரங்களும் தெரியும், இடத்தை வாங்கும்போது பதிவு செய்யப்பட்ட ஆவணமாகத்தான் வாங்க வேண்டும் என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். கிரய ஒப்பந்த தேதிக்கு முன்பே வில்லங்க சான்றிதழ் பார்த்தேன், அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 05.01.2022-ம் தேதிக்கு முன்பே வில்லங்க சான்றிதழ் பார்த்தேன். வா.சா.ஆ.11 நான் தாக்கல் செய்துள்ள வில்லங்க சான்றிதழானது 11.03.2022-ம் தேதி பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. கிரய ஒப்பந்தத்துக்கு வில்லங்க சான்றிதழை நான் தாக்கல் செய்துள்ளேன். அதுபோல் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1-ல் கிரய ஒப்பந்த பத்திரத்தில் சொத்து அடமானம் உள்ளதாக எந்த வாசகமும் உண்டா என்றால் இல்லை. கிரய ஒப்பந்தத்தில் கண்டுள்ள சொத்தின் மதிப்பே ரூ. 2,38,000/- தான் என்றாலும், ரங்கசாமியிடமிருந்து அதிக பணம் வாங்க வேண்டும் என்பதற்காக சொத்தின் மதிப்பை அதிகமாக காட்டி ரங்கசாமியிடமிருந்து தவறுதலாக பணம் பெற முயற்சிக்கிறேன் என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தத்தில் கண்டுள்ள சொத்தை எந்த காலத்தலும் அடமானம் வைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கிரய ஒப்பந்த சொத்தை 07.02.2022-ல் 1 ம் பிரதிவாதி தனது மனைவியான 2ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மென்ட் எழுதி கொடுத்துவிட்டார் என்பதற்காக அதன் பின்னிட்டு உள் நோக்கத்துடன் வா.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்து, அதன்படி பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தத்தில் 4 மாத காலம் என்று

குறிப்பிட்டுள்ளது, 4 மாத காலத்திற்குள்ளே ஏன் நான் வழக்கிறஞர் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் 1-ம் பிரதிவாதி தனது மனைவிக்கு தான செட்டில் மென்ட் எழுதி கொடுத்ததால் முன்னதாகவே நான் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன். போலியாக வா.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்த காரணத்தினால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை (2ம் பிரதிவாதி தரப்பில்)

நான் இந்த வழக்கில் ரூ.15,00,000/- தொகை கிடைக்க வேண்டும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ரூ.15,00,000/- -ஐ நான் கடனாக யாருக்கும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 2-ம் பிரதிவாதி மாலதிக்கு நான் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ரங்கசாமியிடம் தான் கொடுத்தேன். வா.சா.ஆ.1-ஆனது 2ம் பிரதிவாதியும் சேர்ந்து எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான் ரங்கசாமியிடம் பணம் கொடுத்ததாக தான் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டது அல்ல என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது வழக்குரையில் 2012-ம் ஆண்டுக்கு பிறகு தமிழ்நாடு பத்திர பதிவு விதியின்படி பதிவு செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான். கிரய ஒப்பந்தம் எழுதியது, என்டார்ஸ்மென்ட்கள், கையொப்பம் போட்டது அனைத்தும் ஒரே பேனாவில் எழுதுப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ-1- கிரய ஒப்பந்தத்தில் யார் டைப் செய்தார்கள், டிராப்ட் செய்தது யார் என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.3-ல் உள்ள கையொப்பம் 2-ம் பிரதிவாதியின் கையொப்பம் அல்ல என்றால் சரியல்ல. அந்த கையொப்பத்தைத கைரேனை நிபுணர் பரிசோதனைக்கு அனுப்புவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் சொல்வது போல் வா.சா.ஆ. 1 முதல் 3 வரை உள்ள ஆவணங்கள் ஏற்படவில்லை என்றாலும், மோசடியாக ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் இந்த ஆவணங்களை

துணை நோக்கத்திற்காகவும், பண பரிவர்த்தனைக்காகவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 07.02.2022-ம் தேதி எழுதி கொடுத்த சொத்து தற்போது 2ம் பிரதிவாதியிடம் உள்ளது என்றால் சரிதான். இந்த சொத்துக்கள் தாவா -வுக்கு உட்பட்ட சொத்துக்கள் அல்ல என்றால் சரியல்ல. செட்டில்மென்ட் சொத்தின் மீது சார்ச் உள்ளது என்று வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கும், 2-ம்பிரதிவாதிக்கும் இடையே எந்த வித பண பரிவர்த்தனையயும், உடன்படிக்கையும் கிடையாது என்றாலும், அவரை நான் தரப்பினராக சேர்த்தது தவறு என்றாலும் சரியல்ல. 2-ம் பிரதிவாதியும் சேர்த்து பணம் எனக்கு கொடுக்க வேண்டும் என்று வழக்கில கேட்டிருப்பது தவறு என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 2-ம் பிரதிவாதிக்கு எதிராக எந்த வழக்கு மனுவும் கிடையாது என்றால் சரியல்ல. 16.02.2022-ம் தேதி 2-ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பியதாகவும், அவர் மறுத்துள்ளார் என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் அனுப்பியுள்ளேன். நான் தபால்காரரை சரிகட்டி 2-ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வா.சா.ஆ.8-ஐ திருப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. 2-ம் பிரதிவாதி எந்த தொகையும் எனக்கு கொடுக்க வேண்டியதில்லை என்பதால், நான் கேட்ககூடிய பரிகாரம் கிடைக்ககூடியது அல்ல என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.